படி அரிசித் திட்டத்தை வரவேற்பதுடன், இத்திட்டத்தை மற்ற எல்லா ரேஷன் ஏரியாக்களுக்கும் குறிப்பாக நெசவாளர்கள் வாழும் இடங்களுக்கு உடனடியாக விஸ்தரிக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் நிறைய இன்சினீரிங் படித்த பட்டதாரிகளும் பாலிடெக்னிக்கில் படித்து டிப்ளமோ பெற்றவர்களும் வேலையின்றி இருக்கிறார்கள். இவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கக் கோருகிறேன்.

தர்மபுரி மாவட்டம் சேலம் மாவட்டத்திலிருந்து பிரிந்து ஒன்றரை ஆண்டு ஆகியும் மாவட்ட நூலக ஆணைக் குழு, இன்னும் குழு அங்கத்தினர்களை நியமிக்காமலும் பிரிக்கப்படாமலும் இருக்கிறது. அதை உடனடியாகப் பிரிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். அதே போன்று தர்மபுரி மாவட்டத்தில் சுமார் 90 உயர்நிலைப் பள்ளிகள் இருந்தும் தனி மாவட்ட கல்வி அதிகாரி நியமிக்கப்படவில்லை. ஆகையால், தர்மபுரிக்குத் தனி மாவட்ட கல்வி அதிகாரி ஒருவரை நியமித்து, நிர்வாகத்தைத் தனியாக பிரிக்கவேண்டுமெனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்திற்குத் தனியாக இயங்கக்கூடிய அசிஸ்டெண்ட் என்சினீயர் ஃபார் அக்ரிகல்ச்சரல் டிரில்லிங், அலுவலகத்தை ஏற்படுத்தித் தர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இத்துடன் பேரவையின் கூட்டம் நாளை காலை 9 மணி வரையில் தள்ளி வைக்கப்படுகிறது. மீண்டும் பேரவை நாளை காலை 9-மணிக்குக் கூடும். பி.ப. 2-00

பின்னர் பேரவை ஒற்றி வைக்கப்பட்டது.

4. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

48. Notification issued with G.O. Ms. No. 2988, Home, dated the 31st October 1967, making certain amendments to the Madras Motor Vehicles Rules, 1940, published at pages 1 to 40 of the *Fort St. George Gazette* Extraordinary, dated the 30th March 1940, as subsequently amended. [Laid on the Table of the House under section 133 (3) of the Motor Vehicles Act, 1939 (Central Act IV of 1939).]

B. Reports, Notifications and other Papers.

6. Annual Report of the Madras State Khadi and Village Industries Board for 1965–66.

† 7. Resume of Work (XXX Session) transacted by the Madras Legislative Council during the period from 24th to 30th November 1967.

† Despatched to Members on 14th February 1968.